என்று வந்ததற்குப்பின்பு, அந்த வளர்ச்சிப் பணிகள் உங்களுடைய ஆட்சிக் காலத்திலே நடைபெற்றதைக் காட்டிலும், கூடுதலாக புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய கற்பனை, இனிமேல் திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் என்ற பொருள்பட, நீங்கள் கற்பனை செய்து கொண்டிருக்கிறீர்கள்... *(மணியடிக்கப்பெற்றது)*

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அலுவல் நேரம் சில மணித் துளிகள் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: அந்தக் கற்பனை ஒரு காலத்திலும் நிறைவேறப்போவது இல்லை. மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் தமிழகத்தின் முதலமைச்சராக வரப் போகிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* உங்களுக்கு வேண்டுமானால் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பதவி கிடைக்குமா; கிடைக்காதா என்பதுதான் இப்போது இருக்கின்ற பிரச்சினையேதவிர, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிச்சயமாக வருவார்கள் என்பதிலே எந்தச் சந்தேகமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ.வ. வேலுவின் பேச்சு முழுமையாக நிறைவு பெற்றது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(9-3-2005)* காலை *10.00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

40. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. *[1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

2005 மார்ச் 8]

41. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் நான்காவது ஆண்டறிக்கை. *[1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் *(மத்திய சட்டம் 1/1956) 619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

47. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. *(2003-2005)*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS